# ஆத்மஜோதி



ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமிகள்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும்
இறைவன் ஒருவன்
எல்லா உடலும்
இறைவன் ஆலயமே.
... சுத்தானந்தர் ...

சோதி 10 சுடர் 12. விளம்பி ௵ ஐப்பசி 1-10-58.


## பொருளடக்கம்


| | |
|---|---|
| திருக்கூட்டச்சிறப்பு ... | 353 |
| பேரின்பத்தெள்ளமுது ... | 354 |
| ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமிகள் ... | 355 |
| யோக ஆசனங்கள் ... | 359 |
| மரணத்தின் இரகசியம் ... | 361 |
| வழிகாட்டும் ஆத்மஜோதி ... | 364 |
| அன்பு ... | 366 |
| வேண்டுகோள் ... | 368 |
| புண்ணியாத்மாவுக்குப் பாராட்டு ... | 375 |
| பிரணவம் ... | 379 |
| ஸ்ரீலஸ்ரீ மகாதேவ சுவாமிகளும்......... ... | 381 |



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள்சந்தா ரூ. 75-00 வருடசந்தா ரூ. 3-00
— தனிப்பிரதி சதம் -30 —

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்.
பதிப்பாசிரியர்: நா. முத்தையா.

**ஆத்மஜோதி நிலையம்-நாவலப்பிட்டி** (சிலோன்)

ஆத்மஜோதி ஆயுள்சந்தா ஆதரவாளர்
திரு. ச. குகசோதி — கொழும்பு.


# திருக்கூட்டச்சிறப்பு

(பெரியபுராணம்)

பூங்கோயில் எனப் போற்றப்பெறும் திருவாரூரின் உளத் தாமரையாகிய அத்திருக்கோயிலின் எதிரே தேவாசிரியன் என்னும் திருமண்டபம் ஒன்றுளது. **நான்முகன், இந்திரன், திருமால்** முதலான தேவர்கள் புற்றிடங்கொண்ட பெருமானை வணங்கவந்து தங்குமிடம் ஆகையால் அப்பெயர் பெற்றது.

அத் திருமண்டபத்திலே வீற்றிருக்கும் அடியார்களின் மெய்யிலே விளங்குந் திருவெண்ணீற்றின் ஒளியாலும், ஐந்தெழுத்தோசையாலும், தூயநிலைமையாலும் அது திருப்பாற் கடலெனத் திகழ்ந்தது!

அங்குள்ள அடியவர்கள் பிறைமுடிப்பெருமானால் ஆட் கொள்ளப்பெற்றவர்கள்! உண்மையன்பினர்! திருத்தொண்டு செய்யுந் திருக்கையினர்! திருவெண்ணீறு விளங்கும் மெய்யினர்! வெள்ளையாகிய தூய உள்ளத்தினர்! உலகம் போற்றும் புகழினர்! உரைக்கமுடியாத பெருமையினர்! ஐம்பெரும் பூதங்களும் நிலைகலங்கினாலும் சிவபெருமான் மலரடியன்பிலே கலக்கமுறாத திண்மையர்! இன்பதுன்பங்களைச் சமமாக எண்ணுவோர்! மண்ணோடுகளையும் மாற்றுயர்ந்த பைம்பொற் பாளங்களையும் ஒன்றாகவே உன்னுவோர்! அன்பினால் வழிபடலன்றி அமரருலகத்தையும் விரும்பாத வீரர்கள்! அவர்கள் அணியும் ஆரம் உருத்திராக்கமே! உடுத்தும் உடை கந்தையே! செய்யும் வேலை சிவனாரடியை வணங்குவதே! அவர்கள்கொண்ட அன்பு நெய்த்தாரைபோல இடைவிடாது நிகழ்வது! எவ்வகையினும் குறைவிலாத அவர் வீரத்தை எப்படி எடுத்துக் கூறுவது?

தம் அடியார் விரும்பியவாறு வடிவங்கொள்ளும் கூத்தப் பெருமானார் அடியவர்களான அவர்களின் புகழையாரால் கூறமுடியும்? இந்தத்திருக்கூட்டத்தாரையே **ஆலாலசுந்தரப் பெருமான்** உலகிலே பிறந்து வணங்கிப்போற்றிப்பாடினார். அதற்குத் "**திருத்தொண்டத்தொகை**" என்று பெயர்.

# பேரின்பத் தெள்ளமுது

...மகரிஷி சுத்தானந்தர்...

இன்னிய துணைவனானை யல்லாமல் இவ்வுலகில்
எவருமிலை யாங்குமில்லை
ஈசவுன் முன்னிலையி லைந்தவித் தென்னையினி
தேகாந்தமாக்கி விட்டேன்,
தன்னிக ரில்லாத்தடங் கருணையே உன்பதந்
தஞ்சம் புகுந் தொழிந்தேன்!
சதானந்த யோகந் தழைத்திடற் காகிய
தனிப்பெரிய மௌன உறவே!
கன்மங்கள் யாவையுங் கதிர்கண்ட பனியெனக்
காய்ந்திடுந் தவ நெருப்பே!
கட்டவிழ்த் தென்மனக் கவலையினை முற்றுங்
களைந்தசுடர் ஞானவாளே!
அன்னிய மெணுதசக சானந்த மருளுவாய்;
அன்புநீ யாதரவுநீ!
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே
அறிவான பர தெய்வமே! 9

எத்திசையும் உன்னன் பிருக்கவிலையோ? சற்றும்
என்மேலுன் அன்பில் லையோ?
எல்லாமுன் இச்சையின் படியே இயங்கியிங்
கிவ்வுலகு சுழல விலையோ?
முத்துமுத் தாய்த்திகழு முத்தமிழ் மாலையை
முதிர்ந்தவுள் ளன்பர் சூட்டி
மூத்துநகை யோடுனது முத்தியமு துண்டென்று
மோனத் திருக்க விலையோ!
பத்தன்யான் இரவுபகல் பாடியாடிக்கூவி
பலபல தவம் பயின்றே
பார்த்துள மடங்கியுன் பரிவலாற் கதியிலேன்
பரிகாரம் வேறொன்று றிலேன்
அத்தனே யுன்னடிப் பித்தாகி நம்பினேன்
அனைத்துமுன் சித்த மென்றே
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே! 10

# ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமிகள்

(ஆசிரியர்)

"பாம்பின்கால் பாம்பறியும்" என்றொரு முதுமொழி அன்று தொடக்கம் இன்று வரை வழக்கில் இருந்து வருகின்றது. இதேபோல் நம்மத்தியிலே எத்தனையோ மகான்கள் அன்று தொடக்கம் இன்றுவரை வாழ்ந்துகொண்டே இருக்கின்றார்கள். ஒருஞானியை ஒருஞானிதான் அறியமுடியும். ஒரு ஜீவன்முக்தனை ஒரு ஜீவன்முக்தன்தான் அறியமுடியும். மகான்கள் சாதாரணமக்களாகிய எங்களைப்போல் சாதாரண மக்களாகவே வாழ்வது போல் காட்டித் தெய்வீக வாழ்வு வாழ்ந்து மறைந்துள்ளார்கள். அவர்கள் உடல்கொண்டுலாவும் போது அவர்களை யறிந்து வாழ்ந்தவர்கள் பாக்கியவான்கள். மற்றையோர் மனிதராகப் பிறந்தும் பிறப்பின் நோக்கத்தை நோக்கி அடி எடுத்து வைக்கவில்லை. இவர்கள் பெற்றசுகம் விலங்குகள் அநுபவித்த இன்பத்தினும் குறைந்தனவே.

மகான்கள் முத்தியைப் பெற்றபிறகுதான் இன்பம் அனுபவிப்பார்கள் என்பதில்லை. அவர்கள் இந்த உலகத்திலேயே நிலையான இன்பத்தை அனுபவிக்கின்றார்கள். ஒவ்வொரு கணமும் அமைதியோடு வாழ்கின்றார்கள். வறுமை, நோய், கவலை என்பவற்றைக்கண்டு பயப்படுவதில்லை. அவர்கள் உள்ளம் எப்போதும் நோய் அற்றதாக, வறுமை அற்றதாக, கவலை அற்றதாக விளங்குகிறது. இறைவனுடைய திருவருள் நிச்சயமாக நமக்குத்துணை இருக்கிறதென்ற நினைவு எப்போதும் உளத்தை விட்டு நீங்காதிருப்பதால் அவர்களிடம் பயம் என்பதே தலைகாட்டுவது இல்லை.

'அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்சவருவதும் இல்லை' என்று அப்பர்

சுவாமிகள் பாடுகின்றார். அவர்களைப் பார்த்தால் ஏழைபோல இருப்பார்கள். இடையில் கந்தையும்,

கோவணமும் இருப்பினும் அவர்கள் உள்ளத்தில் உறுதிவைரம்போலப் பாய்ந்திருக்கிறது.

மேலேகுறிப்பிட்ட இலக்கணத்திற்கு இலக்கியமாகவாழ்ந்தவர்கள் ஸ்ரீசித்தானைக்குட்டி சுவாமிகள். சுவாமிகள் இந்தியாவிலுள்ள திருவாங்கூர் மகாராஜாவின் ஏகபுத்திரராவார். சுவாமிகளுடைய இளமைப்பெயர் கோவிந்தசாமி என்பது. சுவாமிகள் பட்டத்துக்குரியவராயிருந்தும் அரச செல்வத்தை உதறித்தள்ளி துறவறத்தைமேற்கொண்டார். இலங்கையிலுள்ள வர்கள் துறவறத்தைமேற்கொள்ள இந்தியாசெல்வது வழக்கம். அதேபோல் கோவிந்தசாமியும் துறவறத்தை மேற்கொள்ள இந்தியாவிலிருந்து இலங்கைக்கு யாரும் அறியாது வந்திருந்தார். இளமைதொட்டே அவருடைய உள்ளம் துறவை நாடியிருந்தது. அதனால் அரசமாளிகை, அவருக்கு துன்பவாழ்க்கையாகத் தென்பட்டது. ஒருநாள் யாரும் அறியாது அரசமாளிகையை விட்டுப் புறப்பட்டு திருவருள் துணைகொண்டு கொழும்பைவந்து சேர்ந்தார்.

கொழும்புமுகத்துவாரத்தில் பெரியானைக்குட்டி சுவாமிகள் வாழ்ந்து வந்தார்கள். கோவிந்தசாமி உள்ளத்தில் அமைதிபெறவே அரசமாளிகையைவிட்டுப்புறப்பட்டார். இரண்டு மூன்று தினங்கள்தெருத்தெருவாக அலைந்தார். உணவு உண்பதிலும் விருப்பங்கொள்ளாதவரானார். எதற்காகக் கொழும்புவந்தேன் என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டார். அக்காலத்தில் பெரியானைக்குட்டி சுவாமிகளின் மகத்துவத்தை மக்களிற் பலர் அறிந்திருந்தார்கள். சுவாமிகளைத் தரிசிப்பதற்காகப் பலர் செல்வதுவழக்கம். இருவர் சுவாமிகளுடைய மகத்துவத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்த பேச்சு கோவிந்தசாமியினுடைய காதில் விழுந்தது. பெரியானைக்குட்டி என்ற சொல்லைக்கேட்டவுடனே கோவிந்தசாமியின் உள்ளத்தில் புல்லரித்தது. சுவாமிகளுடைய இடத்தைவிசாரித்தறிந்து உடனே முகத்துவாரம் போய்ச் சேர்ந்தார்.



அடியார் மத்தியிலே சுவாமிகளுடைய தோற்றப்பொலிவைக்கண்டார் கோவிந்தசாமி. சுவாமிகள் கோவிந்தசாமி தூரத்தே வருவதைப் பார்த்துவிட்டார். சித்தானைக்குட்டி வருகிறது எல்லாரும் விலகுங்கள் என்று சுவாமிகள் கூறினார்கள். அடியார்கள் எல்லாரும் எழுந்து அஞ்சலிசெய்து கொண்டு நின்றார்கள். கோவிந்தசாமி முகமெல்லாம் கண்ணீர் வாரச் சுவாமிகளுடைய திருப்பாதங்களிலே வீழ்ந்து விம்மி விம்மி அழுதார். சுவாமிகள் தமது திருக்கரங்களினாலே வாரியெடுத்தணைத்து நீ எனது பிள்ளைதானே. தாயை அடைந்தபின் பிள்ளை ஏன் அழவேண்டும். என்று கூறி அழுகையை மாற்றினார்கள். அன்றுதொடக்கம் உருவை விட்டு நீங்கா நிழல்போல பெரியானைக்குட்டியைச், சித்தானைக்குட்டி பின்தொடர்ந்து உண்மைச் சீடரானார்.

இக்காலத்திலேதான் நாவலப்பிட்டிக்கும், தலவாக்கொல்லைக்கும் மத்தியாக அமைந்த "குயீன்ஸ்பரி" என்றதேயிலைத்தோட்டத்தில் நவநாதசித்தர் என்ற மகான் வாழ்ந்துவந்தார். இவர் இந்தியாவிலுள்ள கொல்லிமலையிலிருந்து வந்து குயீன்ஸ்பரியில் வாழ்ந்த ஒரு சித்தபுருஷர். இவருடைய சமாதியைத் தரிசிக்கக் குயீன்ஸ்பரிக்கு இன்றும் இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் மக்கள் வருகின்றார்கள். பெரியானைக்குட்டி, சித்தானைக்குட்டி, நவநாதசித்தர் ஆகிய மூவரும் ஒரேகாலத்தில் வாழ்ந்த சித்தர்கள், இம் மூவரும் ஒருவரை ஒருவர் சந்தித்ததாகவும், பலசித்துக்கள் விளையாடியதாகவும், வதந்திகள் உண்டு. பெரியானைக்குட்டி சுவாமிகள் தமது சமாதிநிலையை உணர்ந்து சித்தானைக்குட்டியை அழைத்துப் பின்வரும் வாக்கியத்தைக் கூறினார்.

> "புளியமரத்து வீட்டுக்காரி கள்ளன் பெண்பிள்ளையை எடுப்பாய் வம்பு வரும் வழக்குவரும் கெட்டுக்கீரை விற்று மொச்சைக் கொட்டைவிற்று பறங்கித்துரை கோணாமலை ஏறவைப்பார்க்கிலும் பேறாவாய் இருப்பாய்."

பெரியானைக்குட்டி சுவாமிகளின் சமாதிக்குப்பின் சித்தானைக்குட்டி சுவாமிகள் சிவஞெளிபாதம் சென்று சிலகாலம் தவத்தில் இருந்தார்கள். அதன் பின் குயீன்ஸ்பரிக்குப்போய் அத்தலத்திலும் சிலகாலம் தவம் இருந்தார்கள். பின்பு மட்டக்களப்பைச் சேர்ந்த காரைதீவிற்குப்போய் அங்கு "சேதம்மா" என்னும் அம்மையாரோடிருந்தார், சேதம்மா சமாதியடைய சிந்தாமணித்தாயார் ஆதரித்து வந்தார். காரைதீவில் சுவாமிகள் பலசித்துள் விளையாடியதாக அன்பர்கள் கூறுகின்றனர். 10-3-51இல் சுவாமிகள் சமாதி அடைந்தார்கள்.

இறைவன் திருவருளை நேரே பெறுவதென்பது அரியகாரியம். அந்த அருளைப் பெறுவதற்கு எத்தனையோ தகுதிவேண்டும். செல்வத்தையும் செல்வம் படைத்தவர்களையும் கண்டு மயங்கி அவர்களைப் போல நாமும் இருக்கவேண்டும் என்று ஒவ்வொரு கணமும் கவலைப்பட்டு, முயற்சிபண்ணி, அதுபலித்தால் மேலும் செல்வம் ஈட்டவேண்டும் என்று நினைத்து, ஐயோ ஆசை நிறைவேறவில்லையே என்று துன்புற்று வாழ்கிற வாழ்க்கையைப்போன்ற அவலம் வேறு இல்லை. இந்த அவலவாழ்க்கையில் பற்றுக் கொண்டவர்களுக்குத் திடீரென்று இறைவன் சார்பு கிடைத்துவிடாது. ஆனால் தொண்டர்களுடைய குழாத்தில் சேர்ந்து கொண்டார்களானல் அவர்களுடைய சேர்க்கைச் சிறப்பால் தெளிவு பெறுவார்கள். மெல்லமெல்லச் செல்வத்தின்பாலும், செல்வர்களின் பாலும் உள்ள பற்று நழுவிவிடும். இறைவன் திருவருள் இன்பம் ஏறும். இறைவன் நமக்கு நேரே இன்பத்தைத் தருவதைக் காட்டிலும் தன்தொண்டர்கள் மூலமாகத் தருகிற இன்பம் பெரிது.

---

எளிய வாழ்வு, உயர்ந்த நினைப்பு, பரந்த உள்ளம், ஆழ்ந்த அன்பு ஆகிய நான்குமே ஒரு மனிதனுக்கு இம் மண்ணுலகத்திலேயே விண்ணுலக வாழ்வு அளிக்கவல்லன.

# யோக ஆசனங்கள்


(S. A. P. சிவலிங்கம்)

—*—

## 62. ஊர்த்துவ சிரசாசனம்.

(பழகும் விதம்)

சுத்தமானதும், காற்ரோட்டமானதுமான இடத்தில் சமதள விரிப்பின்மேல் (விரிப்பு கெட்டியாக இருக்கவேண்டும்.) **சிரசாசனம்** செய்யவும். சென்ற **ஆத்மஜோதி**" பத்திரிகையில் பார்வையிடலாம்.




பின்வலதுகாலைஇடது தொடையின் மேலும், இடதுகால் வலது தொடையின் மேலும் வைத்து **பத்மாசனம்** செய்யவும். மிகவும்வேகமின்றிச் செய்யவும். வேகத்துடன் செய்தால் கிழே விழ ஏதுவாகும். முழங்கைகள் நன்குகிழே பதிய வைத்திருக்கவும். **சித்திரம் 62** பார்க்கவும். கண் மூடிஇருக்கவும். சுவாசம் சமநிலையில் சுவாசித்து வெளிவிடவும். முதுகு, கழுத்து முதலிய பாகங்கள்நேராய்இருக்கவும். இவ்வாறு தேவைக்குத்தக்கவாறு இருந்தபின் ஆசனத்தைக் கலைப்பித்து மீண்டும் செய்யவும். சுமார் சிறுகச்சிறுக நிமிடங்களாக பலவாரங்களில் 10 அல்லது 15 நிமிடங்கள்வரை இருக்கப்பழகவும்.

### கலைக்கும்விதம்

இடதுகாலை எடுத்து நேராய் மேலே நீட்டி பின் வலது காலையும் எடுத்து நேராய் மேல் நீட்டி **பத்மாசன** நிலையைக் கலைக்கவும். இரண்டு கால்களையும் முன்பக்கம் மடக்கவும். தொடையுடன்; பின் கால்களை கிழே கொணர்ந்து வைத்து முழங்காலுடன் மடக்கி கைகளையும், தலைமையும் எடுத்து மல்லாந்து படுத்து சிரமபரிகாரம் செய்து கொள்ளவும்; அவரவர்களின் உடலுக்குத் தக்கவாறுபலதடவைகள் செய்யலாம்.

## பலன்கள்:-

கால்களின் மூட்டு, கழுத்து, தலை, மூளை, கண்பார்வை, புஜங்கள் முதலியவற்றிற்கு நல்ல இரத்தோட்டத்தையும், நீண்ட ஆரோக்கியத்தையும் கொடுக்கின்றது. மூளை தெளிவுறும், ஞாபகசக்தியதிகரிக்கும், அஜீரணத்தைக் குணமாக்கி ஜாடநாக்கினி விருத்தியாகி நல்ல பசியை யுண்டுபண்ணும். மலஜலம் நன்கு வெளியாகும்.

தலைவலி. பல்வலி, முதலிய வியாதிகளையும் குணமாக்கும். தலைப்பாரத்தையும் குணமாக்கும்.

ஆண், பெண் அனைவரும் செய்யலாம். பெண்மணிகள் **கெற்பகாலம், ருது, மாதவிடாய்** காலங்களில் செய்யலாகா. இந்த ஆசனம் செய்தபின் **வஜ்ராசனம்** செய்யவும்.

---

—பொன்மொழிகள்—

*எளிய வாழ்வு, உயர்ந்த நினைப்பு, பரந்த உள்ளம், ஆழ்ந்த அன்பு, ஆகிய நான்குமே ஒரு மனிதனுக்கு இம்மண்ணுலகத்திலேயே விண்ணுலகவாழ்வை அளிக்க வல்லன.*

# -: மரணத்தின் இரகசியம் :-

ஒருஅந்தணன் மதுரைக்கு மாமனார்வீட்டிற்குப் போகும் வழியே தனது மனைவியுடன் ஒரு ஆலமரத்தில் கிழே தங்கினான். மனைவியை ஆங்கிருத்தித் தான் தாகத்திற்குத் தண்ணீர் கொண்டுவரச்சொன்னான். அந்த ஆலமரத்தின் முன்பு யாரோ விட்ட அம்பு சிக்கிக்கொண்டிருந்தது. காற்றின் விசையால் பெண்ணின் அடிவயிற்றிற் சுறீறென்று பாய்ந்தது. அந்தணன் வந்தான். அந்தோ! மனைவி பிணமாய்க் கிடந்தாள். அங்கு தற்செயலாக ஒருவேடன் நிழலுக்குஒதுங்கிஇருந்தான். அவனே மனைவியைக் கொன்றவன் என்று குற்றஞ் சாட்டிக் குலோத்துங்க பாண்டியனிடம் முறையிட்டான் அந்தணன். பாண்டியன் வேடனைச் சிறையிட்டான். "ஐயோ யான் யாதுமறியேனே" என்று முறையிட்டான்வேடன். பாண்டியனுக்கு உண்மை விளங்கவில்லை. திருவருளாணையால் ஒரு கலியாணவீட்டிற்கு அந்தணனுடன்மாறுவேடம் பூண்டு சென்றான். வதுவரர் மனையில் உட்கார்ந்திருக்கின்றனர். அப்போது பாண்டியன் அருகே ஒருவன் 'இம்மணமகன் உயிரைக்கவர்வோம்' என்றான். இன்னொருவன் ஆள் கொட்டாப்புளிமாதிரி இருக்கின்றானே எப்படிக்கொல்லமுடியும்? என்றான். இன்றுகாலை காற்றின் விசையால் ஆலமரத்தம்பு அந்தப் பார்ப்பிணி வயிற்றில் பாய்ந்து உயிர்வாங்கியதுபோல, அதோநிற்கும்மாடு கயிற்றை அறுத்துக்கொண்டு இந்த மாப்பிள்ளையைக் கொம்பினால் குத்திக் கொல்லச்செய்வோம் என்றான் முன்னவன். இருவரும் எமதூதர். மன்னன் கேட்டான். அந்தணன் கேட்டான். ஐயம் நீங்கியது. பாண்டின் வேடனை விடுதலை செய்தான், அந்தணனுக்கு மறுமணம் நடத்தினான். உலகவாழ்வென்னும் ஆலமரத்தின்கீழ் இருக்கிறோம். காலன்கணை அதில் எப்போதும் குறிவைத்திருக்கிறது. காற்று கொஞ்சம் பிசகினால் கணை நம்மைக் கொல்லும். உள்ளமட்டும் பழி பாவங்களுக்கு அஞ்சி இன்னும தீவினை பெருக்காது. தூயராகவாழுவோம். நாள் தோறும வாழ்வின் ஒவ்வொரு பகுதியைக் காலன் வெட்டிவீழ்த்திக்கொண்டே வருகின்றான். இதனைநாம் ஒருவரும் உற்றுச் சிந்திப்பதில்லை.

*நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்*
*வாளது உணர்வார்ப் பெறின்'*

என்பது வள்ளுவர் வாக்கு. உணர்ந்து அறியக்கூடியவர்களுக்கு நாள் என்பது ஒன்றைப்போலவே அடுத்தடுத்துப் பல நாள்களாகத்தோன்றிச்சிறுகச்சிறுக உயிரை அறுத்துவிடுகின்ற வாளாகும். மனிதனுக்கு வினைத்தெரிந்ததிலிருந்து ஒருநாளைப் போலவே மறுநாளும் தோன்றுகின்றது. ஆனால் ஒவ்வொரு நாளும் இளமை குறைந்து கொஞ்சம் கொஞ்சமாக மரணம் நெருங்கிவருவதை அவர்கள் உணர்வதில்லை. மரமறுக்கும் வாளினுடைய கூரியபற்கள் ஒன்றுபோல ஒன்று ஒன்றன்பின் ஒன்றாக வந்து சிறுகச்சிறுக மரத்தைத்தேய்த்துப் பிளந்துவிடுகின்றன. வாளினுடைய ஒருபல் மரத்தின் மீது உராய்ந்துவிட்டுப்போன உடன் ஓரளவு மரம் தேய்ந்துவிடுகிறது. அதுபோல மனிதனுக்கு ஒருநாள் வந்துபோனஉடன் அவன் உயிர் ஓரளவு தேய்ந்துவிடுகிறது. மனிதன் நாளை அதுசெய்வேன் இதுசெய்வேன் என்று திட்டங்களிடுகின்றான். தனது வாழ்நாள் சுருங்கிவருவதைச் சிந்திப்பதில்லை.

எந்த எண்ணம் இறக்குந்தறுவாயில் மேல்எழுந்து நிற்கிறதோ அதுவே அடுத்த ஜன்மத்தில் வலுவுள்ளதாகிறது என்பது பெரியோரின் கோட்பாடு. இன்று பகலில் சம்பாதித்ததை எடுத்துக்கொண்டு உறக்கத்திற்குப்பின் நாளையதினத்தைத் தைத் தொடங்குகின்றோம். அவ்வாறே இப் பிறப்பில்சேர்த்த சொத்துடன் மரணம் என்ற உறக்கத்திற்குப்பிறகு நமது யாத்திரை மீண்டும்தொடங்குகிறது. இந்த ஜன்மத்தின் இறுதியே வரும் ஜன்மத்தின் தொடக்கமாகிறது. ஆகையால் எப்பொழுதும் மரணத்தை நினைவில் வைத்துக்கொண்டே நடக்கவேண்டும். சாவைநினைத்துக் கொணடிருப்பதற்கு உள்ளமற்றொரு காரணம், சாவினிடம் ஏற்படும்பயத்தைச் சமாளித்து அதைக் கடத்தல் நமக்குச் சுலபமாக வேண்டும் என்பது. ஏகநாத சுவாமிகளைப்பற்றிய ஒரு செய்தி உண்டு. ஒருவர் அவரிடம் ''சுவாமி தங்கள் வாழ்க்கை எவவளவு சிக்கலற்றதாய் பாபமற்றதாய் இருக்கிறது! எங்கள்வாழ்க்கை ஏன் அவ்வாறில்லை. தாஙகள் எவரையும் கோபிப்பதில்லை. எவரிடமும் சண்டைசச்சரவோ, விரோதமோ, வழக்கோ இல்லை. தஙகளுடைய சுபாவம் எவ்வளவு அமைதியும் அன்பும் பொருந்தியதாய் எவ்வளவு புனிதமாயிருக்கிறது" என்றார். அதற்கு ஏகநாதர்



இப்பொழுதைக்கு என்விஷயம் இருக்கட்டும் உன்னைப்பற்றி எனககொரு விஷயம் தெரியவந்திருக்கிறது. இன்றிலிருந்து எழாம்நாள் நீ இறந்துபோவாய் என்றார். ஏகநாதர் வாயிலிருந்து வந்ததை யார் தான் பொய்யென்று எண்ணுவார்கள். ஏழுநாளில் சாவு. நூற்றறுபத்தெட்டு மணிநேரந்தான் இருக்கிறது. எ கடவுளே! இதென்ன ஆபத்து-அந்தமனிதன் அவசர அவசரமாய் வீட்டிற்கு ஓடோடியும்சென்றான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை, இறுதிக்காலம்பற்றிய எல்லாவற்றையும் பிடித்துக் கொள்வதாய்ப் பேசிக்கொண்டிருந்தான். இப்பொழுது அவனுக்கு நோய் உண்டாய்விட்டது. படுக்கையில் நீட்டிப் படுத்துவிட்டான். ஆறு நாட்கள் கழிந்தன. எழாம்நாள் ஏகநாதர் அவனைப்பார்க்க வந்தார். அவன் வணங்கினான். ஏகநாதர் என்ன விஷேடம் என்றார். அவன் எல்லாம் ஆயிற்று இனிப் போகவேண்டியதுதான் என்றான். ஏகநாதர் இந்த ஆறுநாட்களில் எவ்வளவு பாவம் செய்தாய்? எத்தனை பாவ எண்ணங்கள் மனதில் உதித்தன? என்றார். மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தவன் நாதரே தீய விஷயங்களைக் குறித்து எண்ணுதற்கு நேரமே கிட்டவில்லையே! மரணம்தான் சதா கண்முன் நின்றுகொண்டிருக்கிதே என்றான். ஏகநாதர் என்வாழ்க்கை இவ்வளவு பாபமற்றதாய் இருப்பதற்குக் காரணம் இன்னதென்று இப்பொழுது புலனாய் விட்டதல்லவா? மரணம் என்ற சிங்கம் எப்பொழுதும் எதிரேநின்று கொண்டிருக்கையில் எவருக்குத்தான் தீயஎண்ணங்கள்தோன்றும்.

---

## பொன்மொழிகள்

*பெரும் நிலைமையொன்றில் யாரும் பெரியவராக ஆய்விடலாம். பலர் முன் கோழை ஒருவனுங்கூடத் தைரியம் பெறுகிறான். உலகத்தினர் தன்னைக் கவனிக்கும்போது யாருடைய இருதயந்தான் உணர்ச்சி நிறைந்திராது போகும்? அமைதியாக உறுதியாக நிமிடத்திற்கு நிமிடம் தனது கடமையைச் செய்யும் புழு இருக்கிறதே அதனுடைய பெருமைதான் உண்மையான பெருமை.*

# வழிகாட்டும் ஆத்மஜோதி

செல்வி C-மதார் நாச்சியா

மனிதன் உலகில் தோன்றிய நாள்முதல் ஒருகேள்வியைச் சதா கேட்டுக்கொண்டிருக்கிறான். அதுதான் உலகில் ஏன்பிறந்தோம் என்பது. தெரிந்தோ தெரியாமலோ இவ்வுலகில் பிறந்துவிட்டான். ஆனால் மனிதன் வாழும் போது எந்தவிதமான நோக்கத்துடன் வாழ்வது என்பதே முக்கிய பிரச்சினையாகும். மனதினிலே எழுகின்ற எண்ணப்படி வாழ ஆரம்பித்து விட்டால் மனிதன் பலஹீனனாகி மிருக நிலைக்கும் கீழாகமாறிவிடுவான். ஆகவே இவ்வுலகில் சொற்ப காலம்வாழப்போகும்மனிதன் சிறந்தமுறையில்உயர்வாக வாழ எத்தனிக்க வேண்டும். ஆசைகள் பல நிறைந்து மனதில் கணக்கற்ற போராட்டங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தால் வாழ்க்கையைச் சாந்தமாகவும் இனிமையாகவும் அனுபவிக்க முடியாது.

ஒழுங்காக வாழ முயற்சிக்கும் மனிதன் தனது மனதையே நன்கு ஆராயவேண்டும். ஏனெனில் மனிதன் தனது அந்தரங்கஉள் மனதைச் சரியாக தெளிவாக விளங்காததினால்தான் ஆசைகளுக்கு அடிமையாகி வாழ்க்கையில் ஏமாற்றத்தையும் துயரத்தையும் அடைகிறான். மனிதன் இன்பத்தைநாடியே அங்கும் இங்கும் சுற்றித்திரிகிறான். மட்டரகமான உலக இன்பங்கள் சிறிதுநேரம் கவர்ச்சிகரமாக இருந்தாலும் முடிவில் மறைந்துவிடும் அதிருப்தியிலே அகப்பட்டு ஆடுகின்ற மனம்சலித்துச் சக்தியைஇழந்துவிடுகிறது. புலன்களினால் நுகரப்படும் இன்பங்கள் நிலையானதல்ல. மனிதன் ஐம்புலஇச்சைகளில் மயங்கிக் கிடக்கும்வரையில் பரிசுத்தமான ஆனந்தத்தை ரசிக்கமுடியாது. அக மதியிழந்து ஆவேச உணர்ச்சிகளுக்கு அடிமையாகும் வரையில் வாழ்க்கையில் இன்பத்தை அடையமுடியாது. மனதினுடைய இயல்பு எதையாவது ஒன்றைநினைத்து சுழன்றுகொண்டேயிருப்பதே யாகும். சென்ற காலத்தில் அனுபவித்த இன்பங்களைக் கற்பனை செய்து மனமானது நிகழ்காலத்தில் கலங்கிக்கொண்டிருக்கும்; அல்லது எதிர்காலத்தில் ஏதாவது செய்யவேண்டுமென ஏங்கிக்கொண்டிருக்கும்; ஆகவே மனதின் செயல்களைச் சம்பூரணமாக விளங்கிக் கொள்ளும் திறமை இருந்தால் தான் உலகில் உயர்தரமான நிலையை அடைய முடியும், ஊன்றிக்கவனித்தால் இந்தஉலகம் மனதின் அசைவுகளுக்குத் தகுந்தவாறு மாறிமாறிக் காட்சியளிக்கும், எண்ணங்களின் தோற்றமேயாகும். எண்ண அலைகளின் ஓட்டங்களை ஓய்வு பெறச்செய்து, எந்த விஷயங்களையும் விருப்பு – வெறுப்பில்லாது தெளிவாக ஆராயும் ஆற்றல் நமக்கு ஏற்பட்டால் தான் வாழ்க்கையில் அவ்வப்போது நிகழும்பிரச்சினைகளைச் சமாளிக்கமுடியும்.

மனிதனுடைய மனம் பெரும்பாலும் நாமரூபங்களில்கட்டுப்பட்டு அலைந்துதிரிகிறது. தினசரிவாழ்க்கையில் பலவிதமான ரூபங்களைக்காண்கிறான். அவைகளில் சிலகுறிப்பிட்ட ரூபத்தைமட்டும் அதிக அக்கறையுடன் விரும்பி மோகிக்கின்றான். அந்த ரூபத்தில் மயங்கியமனமானது ஓயாக் கவலையினால் சிக்குண்டு தடுமாறுகிறது.

மனிதனிடத்தில் தெய்வீக நிலைக்கு அழைத்துச் செல்லும் ஆத்மீக சக்தியும், அற்புத அறிவும் இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் மனமானது கீழ்த்தரஆசைகளினால் அலைந்துதிரிவதனால் மறைந்துகிடக்கும் ஆத்மஜோதியின் மகத்துவத்தை உணரமுடியவில்லை. பரிசுத்த இதயத்திலே பரிணமிக்கும்மௌனத் தியானத்தினால்தான் ஆத்மஜோதி மங்காது பிரகாசித்து நிலையான வாழ்விற்குவழிகாட்டும் அதுவே சாசுவதமான அமைதியும் ஆனந்தமும் பரிபூரணவிடுதலையும் நல்கவல்லது.

# அன்பு

(காந்தி)

சேவை செய்ய விரும்பும் பொழுது உறவு கொண்டாடுவதும், உரிமை வேண்டும் பொழுது உறவைக் கூறாதிருப்பதுமே உயர்ந்த ஒழுக்கமுறையாகும். இந்த முறையைக்கையாண்டால் மனிதர்களுக்கிடையில் சண்டை சச்சரவுகள் உண்டாகாமல் சந்தோஷமும் சமாதானமுமே உண்டாகும். இது என்னுடைய நீண்டநாள் அனுபவம்.

மிருக பலமானது ஆயிரக் கணக்கான வருடங்களாக ஆட்சி செய்துவருகிறது. அதன் கசப்பான மாகூலை அறுவடையும் செய்து வருகிறோம். ஆனால் அதனால் உலகத்துக்கு விமோசனம் உண்டாகும் என்று தோன்றவில்லை. இருளிலிருந்து ஒளி உண்டாகுமானால்தான் பகைமையிலிருந்து அன்பு பிறக்கும்.

நான் வாளை எறிந்து விட்டதால் என்னை எதிர்ப்போருக்கும் கொடுக்கக் கூடியது அன்பு நிரப்பிய கிண்ணம்மட்டுமேயாகும். அந்தக் கிண்ணத்தைக் கொடுத்தே அவர்களை என்னுடன் சேருமாறு செய்ய எண்ணுகிறேன்.

என்னுடைய இலட்சியம் எல்லோருடனும் நட்புக்கொள்வதே. அன்புசெய்வதற்கும் தீமையை எதிர்ப்பதற்கும் முரண்பாடு கிடையாது.

மனித தர்மமானது உயிர் நீக்கும் போட்டியன்று. உயிர்தரும் ஒத்துழைப்பேயாகும்.

எல்லோரும் ஒரேமாதிரி எண்ண முடியாது. ஒவ்வொருவரும் உண்மையின் அம்சம் ஒவ்வொன்றையே அறியமுடியும். அதனால் பரஸ்பரம் சகிப்புத்தன்மையை வளர்த்துக்கொள்வதே சிறந்த சிறந்த ஒழுக்கமுறையாகும்.

கோபத்தைக் கோபமின்மையால் வெல்லும்படி புத்தபெருமான் உபதேசிக்கிறார். "கோபமின்மை" என்பது யாது? அன்புதான் அது. கோபம் அடைந்தவரிடம் சென்று கோபத்துக்குக் காரணத்தைக்கேட்டு அறிந்துகொண்டு, நீ தவறு செய்திருந்தால் அதற்காக



அவருக்கு ஈடுசெய்து, அவர் கோபம் நல்லதன்று என்பதை எடுத்துக் காட்டவேண்டும். இதுதான் "கோபமின்மை" இதை இதயத்தில் அன்புடையவரே அனுஷ்டிக்க இயலும். இந்த அன்பை இடைவிடாமல் முயன்று வளர்க்கவேண்டும்.

எவ்வளவு மன்னித்தாலும் நன்மையே உண்டாகும். பலவீனர்கள் மன்னிக்கமுடியாது. பலவான்களால்தான் முடியும்.

அன்போடு உறுதியைச்சேர்த்து விட்டால் முடிவில் எதிர்ப்பவர் ஒருவர்கூட இல்லாமல் செய்துவிடலாம். சீர்திருத்த விரும்புபவர் இரங்கவும்கூடாது, கோபிக்கவும் கூடாது.

பிறர்தான்சொல்வதைக் கேட்கவில்லை என்று சீர்திருத்தவிரும்புபவன் கோபப்படக்கூடாது. கோபம்வந்தால்காத்திருக்கவும், கவனிக்கவும், பிரார்த்திக்கவும் கற்றுக்கொள்வதற்காகக் காட்டுக்குப் போகக்கடவன்.

கைராட்டினக்கடமை கடமைகளில் தலைசிறந்ததாகும். ஏனெனில் அது அன்பினால் எழுவது. அன்பே சுயராச்சியம்.

ஒத்துழையாமை இயக்கம் ஜனங்களைப் பலமும் தன்னம்பிக்கையும் உடையவர்களாகச் செய்யும் நோக்கமுடையது. பகைமையை இரக்கமாக மாற்ற முயல்கிறது.

---

## பொன்மொழிகள்

முடிவிலாத பெருவாழ்வென்னும் சங்கிலியில் மனிதவாழ்க்கை ஒரு வளையமேயாகும். உலக ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதோடும் தூல உடைமைகளைப் பெருக்கிக்கொண்டு போவதோடும் நின்றுவிடாது. அதற்கப்பாலும் செல்வது மனித வாழ்க்கையின் நோக்கம்.

உள்ளும் புறமும் தூய்மை உடையோரால், சிறத்தையோடும் அன்போடும் சமைக்கப்பட்டு, இறைவனுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட உணவு நற்குணத்தை வளர்க்கும் உணவாகும். வேள்வியால் தூய்மையாக்கப்படாத ஊணையுண்பவன் பாவத்தையே உண்கிறான் என்று பகவான் கீதையில் போதிக்கிறார்.

# வேண்டுகோள்

நற்றவம் பொலிய வேண்டும்;
நலம்பல மலிய வேண்டும்;
குற்றங்கள் நலிய வேண்டும்;
குணம்பல குவிய வேண்டும்;
செற்றங்கள் நீங்க வேண்டும்;
சிவமணம் ஓங்க வேண்டும்;
பற்றற்ற உனது பாதம்,
பற்றிட வேண்டும் அன்னாய்! 1

தன்னலம் ஒழிய வேண்டும்;
பொதுநலம் தழைக்க வேண்டும்;
இன்னுயிர்க் கருணை வேண்டும்;
இணையிலாப் பொறுமை வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்;
தெளிந்தநல் லறிவு வேண்டும்;
இன்னலில் இன்பம் காணும்
இதயந்தந் தருள வேண்டும்! 2

புனிதரின் இணக்கம் வேண்டும்;
புல்லரைத் துறக்க வேண்டும்;
வினைசெயும் திறமை வேண்டும்;
வீரியம் வேண்டும்; ஞானக்
கனிவளம் பெருக வேண்டும்;
கற்றவா றொழுக வேண்டும்;



கனவிலும் மறவா துன்னைக்
கருதிடும் பேறு வேண்டும்! 3

அன்பு, அருள், அறிவு, சாந்தம்,
அழகு,பே ராற்றல், வாய்மை,
தெம்பு, நல் லுறுதி, சுத்தம்,
தெளிவு, பே ராண்மை, வீரம்,
நம்பிக்கை, ஈவி ரக்கம்,
நற்பொறை, கருணை, ஞானம்,
இன்பநற் பண்ப னைத்தும்,
எளியனுக் கருள வேண்டும்! 4

இகபரம் அருளும் உன்றன்
இணையிலா மலர டிக்கே,
அகங்கரைந் துருகி, நித்தம்
அருட்பாக்கள் பொழிய வேண்டும்;
சகமெலாம் ஈன்று, காத்துச்
சங்கரித் திடும், ஓங் கார
பகவதீ! உனையல் லால், இப்
பாலனுக் கருள்வார் யாரே?
5

"பரமஹம்ஸ தாசன்"

கடவுட்கலப்புடன் வாழும் மனிதன்குரல் ஆற்றின் சலசலப்புப் போலவும் பயிர்களின் சிலுசிலுப்புப்போலவும் மிக இனிமையாயிருக்கும்.

# நமது சமய நெறி : (ஹரிஹர கிருஷ்ணமூர்த்தி)

சமயம் என்றால் என்ன? சமயம் எப்பொழுது தோன்றியது? சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பு யாது? என்பது போன்ற வினாக்களுக்கு அறிவின் துணைகொண்டு விடைகாணின் ஓரளவு புலனாகும்.

மனித அனுபவங்களில் ஒருமுக்கியப் பகுதியைச் சமயம் என்று கூறுவர் அறிஞர். சமயம் ஒழுக்கத்திற்கு அடிப்படை. மனிதன் விலங்குகளைப்போல் வாழாது நன்மை, தீமை பரவ, புண்ணியம் போன்றவைகளைப் பகுத்துணர்ந்து தன்னிலும் மேலான ஒன்றை அடையக் கருதுகிறான். அதற்கென ஓர் வழியைக் கண்டான். அவ்வழியே சமயமாகும். சமயம் அப்பழுக்கில்லாதது. தீமையும், பொய்மையும் காணப்படாத ஒன்று உலகிலே இருக்குமேயானால் அது சமயம் தவிர வேறு இல்லை. சமயமே அறிவுத்துறைகள் அனைத்திற்கும் உயர் நாடியாக உள்ளது. உலகில் ஒவ்வொரு சமயமும் தனக்கே உரிய சில அடிப்படைத்தத்துவங்களை வித்தாகக்கொண்டு நிலைபெற்று நிற்கிறது. தத்துவங்களுக்கு ஏற்றவாறு சமயச்சடங்குகள் பல பின்னிக் காணப்படுகின்றன. இச்சடங்குகள் சமய வளர்ச்சிக்கு ஒரு சாதனமேயாகும். இவையே சமயக்குறிக்கோளாக மாறின் தீங்கு விளைவிக்கும் என்பதாக அறிஞர் கூறுகின்றனர்.

மேலும் உலகவரலாறு தொடங்கிய காலத்திலிருந்தே சமயஉணர்ச்சியும் தோன்றிவிட்டது. சமய உணர்ச்சி மக்களால் பல வகை நிலைகளில் வளர்க்கப்பட்டது. ஆதி மனிதன் காடுகளில் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில் இயற்கைப் பொருள்களையும். அதன் செயல்களையும் கடவுளாகக்கருதி வழிபட்டனர். இந்நிலை மாறித் தம்மைச் சுற்றிலும் கண்ணுக்குப் புலப்படாத ஆவிகளையும், தெய்வமெனக் கருதி அதற்குரிய சடங்குகளைச்செய்து தொழுதனர். இன்று கல், மண் போன்றவற்றால் செய்யப்பட்ட பற்பல உருவங்களைச் சக்தி வாய்ந்த கடவுளின் தன்மையாக மனதிற் கொண்டு வழிபட்டுக்கொண்டுவருகின்றனர். பொதுவாகப் பார்க்கும்போது சமயம் என்பது மனிதனுக்கும், மனித நிலைக்கும் அப்பாற்பட்ட



தாகக் கருதப்படும் சக்திக்கும் உள்ள தொடர்பை இணைப்பதாகும். இன்று சமயத்தால் பல இடையூறுகள் ஏற்படுகின்றன எனக் கூறப்படுகிறது. இஃது ஓரளவு உண்மையாயினும் சமயத்தால்விளையக்கூடிய நன்மைகள் பலவேயாகும். இன்றையஉலகம் பிணக்குகளாலும், பூசல்களாலும், வேறுபட்ட மனப்பான்மையாலும், வஞ்சம் பேராசை, பொறாமை போன்றவற்றாலும் மூடிக்கிடக்கின்றது. இத்துணையும் கிளம்புதற்குக் காரணம் யாது? மக்கட் சமுதாயத்தையே ஏன் உலகத்தையே அழிக்கக்கூடிய சர்வ வல்லமை வாய்ந்த அணுகுண்டுகளையும், ஹைடிரஜன் குண்டுகளையும் பயன்படுத்தலாம் என்ற நினைவு வல்லரசுகளிடத்தே தோன்றியதற்கு அடிப்படைக்காரணம் யாது? இவை போன்றவற்றை சற்று சிந்தித்தால் சமயத்தின் அடிப்படைக் கொள்கையான அன்பின்மையே காரணம் என்பது புலனாகும். ஆகவே சமயத்தின் அடிப்படைக் கொள்கை அன்பேயாகும் என்பதே ஆன்றோர் கண்ட முடிவு.

உலகின்கண்ணுள்ள பல்வேறு மதங்களும் தங்களுக்கெனத் தனிச் சமயக் கொள்கையை வகுத்துக் கொண்டு அதற்குரிய சமயச் சடங்குகளைச் செய்து வருகின்றன.

சமயத்தில் தொடர்பு பெறும் இரு பொருள்கள் கடவுளும், மனிதனும் எல்லாத்தன்மையும் ஒருங்கு அமைந்த மனிதனே சர்வ வல்லமை படைத்த இறைவனின் தொடர்பைப்பெறமுடியும். இத்தகையத்தொடர்பைப் பெறச் சமயம்தான் தக்கவழி எனப் பெரியோர் பலரும் கண்டனர். அதற்கெனத் தங்கள் உடல் பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தனர். மேலும் சமயத்தையும் புனிதப்படுத்தினர்.

இந்தியாவில் வைணவம், பௌத்தம், சைனம் போன்ற பல சமயங்கள் இருந்தன. இச்சமயப்பெரியார்கள் தங்களது சமயக்கொள்கைகளைப் பரப்பப் பாடுபட்டனர். சைனமும், பௌத்தமும் மன்னர்க

ளால் ஆதரிக்கப்பட்டு வேகமாகவளர்ச்சியுற்றபோதிலும் நாளடைவில் மங்கி மறைந்துவிட்டன. இச்சமயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறிக்கோளைப் பிரதானமாகக் கொண்டு வளர்ந்தன. அதற்கென தனி நூல்களும் எழுதப்பட்டன. பௌத்தம் தன் சமயத்தைப் பரப்பும் நோக்குடன் மணிமேகலை நூலைத் தோற்றுவித்தது. சைனம் தன் சமயத்தைப் பரப்பும் நோக்குடன் சீவக சிந்தாமணியை இயற்றியது. வைணவ சமயத்தை உயர் நிலையில் நிறுத்தியவை ஆழ்வார்கள் பன்னிருவரும் பாடியருளிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்னும் நூல் ஆகும். இந் நூலும், சைவத் திருமுறைகளும் சைனத்தையும், பௌத்தத்தையும் பரவ விடாமல் தடுத்து நிறுத்தி உலக இலக்கியத்திலே சிறந்தது எனப் புகழ்பெற்றன. இத்தகையசமயம் போன்று தமிழ் நாட்டில் சைவம் தோற்றுவிக்கப் பட்டது. வைணவ மதத்திற்கு பன்னிரண்டு ஆழ்வார்கள் எப்படியோ அவ்வாறே சைவசமயத்திற்கு வித்தாய் இருந்தவர்கள் அறுபத்து மூன்று நாயன்மார்கள். வைணவ ஆசாரியர்கள் விசிட்டாத்து வைதத்தை வகுத்ததுபோல, சைவ ஆசாரியர்கள் சைவசமய சித்தாந்தத்தை வகுத்தார்கள். இவர்களுள் முதன்மையானவர் மெய்கண்ட தேவர் ஆவர்.

உலகில் உள்ள எல்லாச் சமயங்களின் கொள்கைகளையும் ஆராயுமிடத்து ஒரு சமயம் மற்றொரு சமயம் கூறும் கொள்கையை மறுக்கிறது. ஆனால் எல்லாச் சமயங்களின் அடிப்படைக்கொள்கைகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது சைவசமயமேயாகும். இதனை எவரும் மறுக்க முடியாது என்பதைத் தாயுமான அடிகளாரின்,

வேறுபடும் சமயமெல்லாம் புகுந்துபார்க்கின்
　விளங்குபரம் பொருளே நின் விளையாட்டு அல்லால்
மாறுபடும் கருத்தில்லை முடிவில் மோன
　வாரிதியின் நதித்திரள் போல் வயங்கிற்று அம்மா.

என்னும் பாட்டை நோக்கின் விளங்கும்.



சைவ சமயத்தைத் தழைத்தோங்கச் செய்தபெரியோர் பலரேயாயினும், சைவ சமயத்திற்குப் புத்துயிர்கொடுத்து பொலிவுறச்செய்தவர்கள் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற சமயக்குரவர்களே ஆவர்.

இக் குரவர் நால்வரும் காலத்திற்கும், கருத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப சமயத்தைப் புனிதப்படுத்தி அதன் வழியில் மக்களைப் பழக்கி நல் வழியில் இட்டுச் சென்றனர். உடல் வியாதிக்கு ஏற்ப மருந்துகளைக் கொடுத்து வியாதியைப்போக்குவது போன்று உள்ளத்தில் குடிகொண்டுள்ள மன வியாதியைப் போக்கச் சமயத்தின்மூலம் கடவுள் நெறி யென்னும் சிறந்த மருந்தைப் பல்வகைப்பட்ட பெயரால் கொடுத்து மக்களின் மனத்தில் உள்ள இருளைப்போக்கினர்.

அறமும், அன்பும் மக்களிடம் குடிகொள்ளவேண்டும். அன்பே சிவம். அதுவே சைவசமயத்தின் அடிப்படைக் கொள்கை. அன்பின் மூலம்தான் 'உண்மையுமாய் இன்மையுமாய்' இருக்கின்ற ஆண்டவனை ஒளியாகவும், ஒலியாகவும் இருக்கின்ற ஆண்டவனை, அகத்திலும் புறத்திலும் இருக்கின்ற ஆண்டவனைக் காணமுடியும் என்பதை எடுத்துக்காட்டிச் சமய இருளைப்போக்கினர். இவ் இருளைப் போக்கும் சக்தி இன்றல்ல, நேற்றல்ல – மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சமயம் காண்பித்தது. ஆனால் அதனை மக்கட் சமுதாயம் சரிவரப் பயன்படுத்திக்கொள்ளாத நிலையிலே இருந்தகாலத்தில்தான் சமய குரவர்கள் கண்டு "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றும் சமயம் வளர்த்தால்தான் சமுதாயமும் வாழமுடியும் என்ற உயரிய கொள்கைகளை பரப்பினர். நிற்க பழந்தமிழ்ப் பழமொழியைத்தான் பாருங்களேன். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்றும் ,அவனன்றி ஓரணுவும் அசையாது' என்றும் கடவுள்

*தன்மையைத்தான் எவ்வளவு அழுத்திக் கூறுகிறது. கடவுளின் நெறி வாழ்ந்தால் நாம் வாழ்வோம். படைத்தல், காத்தல் அழித்தல் என்ற முப்பெரும் சக்தியும் அவனுக்குத்தான் உண்டு. எனவே எத்துணை சிறந்த கல்வியறிவு பெற்றிருப்பினும் சர்வ வல்லமையும் படைத்த கடவுளைத் தொழாமல் இருப்பின் தான் பெற்ற கல்வியினால் எவ்விதப் பயனையும் அடைய முடியாது என்பதனை வள்ளுவர்;*

> கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழா அர் எனின்.

*என்றும்,*

> தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
> மனக்கவலை மாற்றல் அரிது.

*என்றும் இரு குறள்களின் மூலம் எடுத்துரைக்கின்றார். நிற்க.*

*விதையும் மண்ணும் கூடினால்தான் செடிவளரும். நல்லவிதை தானாக முளைத்துவிடாது. சிறந்தமண் தானாகச் செடியை உண்டாக்கிவிடாது. அதுபோலவே சமயம் இல்லாவிடில் சமுதாயம் வாழ முடியாது. சமுதாயம் இல்லாவிட்டால் சமயம் வாழ முடியாது. சமயம் ஆண்டவனை அடைய ஒரு ஊன்றுகோல் போன்று உதவும் தன்மையது என்பதனை உணர்ந்து அதன்மூலம்கடவுளைக்காண நினைத்தால் அது வெற்றி பயக்கும் என்பதில் சந்தேகமில்லை.*

*நமது சமயம் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பண்பட்டு உயர்ந்து செம்மை சான்றது. அடிப்படை வலிமைகள் நிறைந்தது. அழிக்கும் எதிராற்றல் களை மாய்த்து விட்டு நிலைத்து நிற்க வல்லது. ஒழுங்கிற்கும், கட்டுப்பட்ட வாழ்க்கைக்கும் நெறிதுறைகளை வகுத்துக் கொடுக்கும் நமது சமய மரபிற்கு வணக்கம் செலுத்தி அதைக் கடைப் பிடிப்போம். அதுவே அதற்கு நாம் அளிக்கும் பெருமை.*

---

# புண்ணியாத்மாவுக்குப் பாராட்டு

(திவான் பகதூர் சிறீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள்—சென்னை)

சுவாமி **ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி** அவர்கள் தங்கள் நினைப்புப் பேச்சுச் செயல்களின் மூலம் உலகிலே பரப்பிவரும் தெய்வீக மூச்சைச் சுவாசிக்கும் அருமையான வாய்ப்பு அடியேனுக்குக் கிடைத்துள்ளது. இத் தெய்வீக மூச்சு சுவாமிகளின் பஜனை நாமசங்கீர்த்தனங்களினாலும், அவர்தம் அருணோக்கம்அருள் நகை என்பவற்றினாலும் ஆசிகள் ஆசீர்வாதங்களாலும் சுவாமிகள் சந்நிதியினாலும் சகவாசத்தினாலும் நன்குபரப்பப்பெற்று வருகிறது.

ஆண்டவன் அடியேனை எண்பதாண்டளவும் வாழச்செய்து ஆத்மீக ஞானியொருவரின் ஆத்மஞான உண்மைகளைக் காணவும் கேட்கவும் கற்று அதிசயமுறவும் செய்துவைத்தமையை நினைந்து பெரிதும் மகிழ்கின்றேன்.

நம்மைப் போலவே, பல்லாண்டுகளாகச் சுவாமிக்குச் சீடராயிருந்து அவர்தம் குணநலச் சிறப்புகளை நயல்பவராகிய **ஸ்ரீ ஹரிடிக்மன்** என்பவர் சமீபகாலத்தில் தாம் வெளியிட்ட "யோக சக்கரவர்த்தி" என்னும் நூலிலே சுவாமிகளைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

*மிகவும் தூய்மை வாய்ந்த ஒரு ஜீவாத்மா இந்நாள் நம்மத்தியிலே வாழ்ந்து வருகின்றது. அதன் அருளுக்கோ எல்லையில்லை. சாதி வித்தியாசத்தையோ வர்ண பேதத்தையோ அது பாராட்டுவதில்லை. இந்துவும், கிறீஸ்தவனும் அதற்கொன்றே. முஸ்லீம் சீக்கியன் பௌத்தன் என்னும் சமயவேறுபாட்டையோ அது கவனிப்பதில்லை. அனைவரும் ஆண்டவனின் ஆசீர்வாதத்திற்குரியஜீவான்மாக்கள் என்ற அளவில் ஒரேதன்மையர் என்பது அதன் கொள்கை. அதனால்தான் அவரை ஒரு மனிதன் என்ற ரீதியிற் குறிப்பிடாது ஒரு "ஆன்மா" என்று குறிப்பிடுகிறோம். ஞானி என்னும் பெயருக்குரிய உண்மையான அர்த்தத்தில்வைத்துப் பார்க்கையில் அவர் மானுஷீகத் தத்துவத்தின்*

எல்லையைக் கடந்து நிர்மலமான தன்புகழோடு திகழ்கின்றார். ஒரு வித்தகனாக-மகாத்மாவாக-மகாபுருஷனாக காட்சியளிக்கின்றார்.

சுவாமி சிவானந்தா என்பது நவ இந்தியாவில் மிகப்பிரசித்தமான ஒரு திரு நாமம். இந்தியாவில் மட்டுமன்று, ஆபிரிக்கா அமெரிக்கா ஐரோப்பா ஆகிய தேசங்களிலும் இத்திருநாமம் வரவரப் பிரசித்து பெற்றுக் கொண்டு வருகின்றது.

அவருடைய இந்த விமர்சனம் உண்மைநிறைந்ததும் வியக்கத்தக்கதுமாகும் அன்றியும் சுவாமிகளை ஜீவாத்மா என்று அழைப்பதில் நான் தவறிழைத்துவிடவில்லை என்று நிரூபிப்பதற்கு நான் பிறிதோர் மன்னிப்பு வேண்டிக் கொள்ளாதிருக்கும் அளவிற்கு என் உள்ளத்துணர்ச்சியை நன்கு புலப்படுத்துவதுமாகும்.

புத்தபகவான் தமது தியானநிலையிலிருந்து நீங்கி அஷ்டசீலத்தை உபதேசிப்பதன் மூலம் எங்ஙனம் உலகிற்கு உபகாரியாகத் திகழ்ந்தாரோ அங்ஙனமே சுவாமிஜீ அவர்களும் தமது சாதனை நிலையிலிருந்து நீங்கி எல்லோருக்கும் நண்பன் என்ற முறையில் ''விஸ்வாமித்திரன்'' பெயருக்குத் தகுதியுடையவராத் திகழ்கின்றார். அவர் சந்நியாச நிலைபெற்று ஞான சாதனையையும், அத்யாத்ம வித்தையையும் வட இந்தியா முழுவதிலும் பயிற்றி வருகின்றார். அன்று ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் தெற்கே மலையாள நாட்டிலிருந்து வடக்கே காசிநகர் வரை சென்று உலக முழுவதற்கும் ஆத்மீக ஞான ஒளியைப் பரப்பியவாறே, சுவாமி அவர்களும் திராவிடத்திலிருந்து ரிஷிகேசம்வரை சென்று உலகம் முழுவதற்கும் ஆத்மஞானத்தைப் பரப்பி வருகின்றார்.

1924-ம் ஆண்டு வரை சுவாமிகளின் வாழ்க்கை, நம்முட் பலர் வாழ்க்கையைப் போன்று சுயநலங்



கொண்டதாகவேயிருந்திருக்கும் என்று நாம் கற்பனை பண்ணிவிடுதல் கூடாது. அவர் மேன்மை தங்கிய அறிஞரும் வித்தகருமாகிய அப்பைய தீக்ஷிதர் அவர்களின் மரபிலே உதித்தவர். மல்யுத்த வீரன் ஒருவனுக்குரிய தேகதிடம் உள்ளவராய் இருந்தபோதிலும் அவர் கருணை பூத்த இளகிய மனப்பான்மையுள்ளவராயிருந்தார். இயல்பிலேயே உல்லாசப்பொழுதுபோக்குக்காரன் போலக் காணப்பட்டாலும் அவர் எல்லோரின் நன்மதிப்பையும்பெற்றுள்ளார். மலாயாவில் வகித்துவந்த .டாக்டர்’ உத்தியோகம் அவர் தம் மனநிலைக்கும் இயற்கை சுபாவத்திற்கும்உகந்ததாக அமைந்துவிட்டது, தம்முடைய வருவாயைப்பற்றிச் சிறிதும் கவலைகொள்ளாமல் வியாதியாளரைத் திறமையாகப் பரிபாலிப்பதிலேயே உன்னத மகிழ்ச்சியுற்றார். ஆபத்தான நிலையிலிருக்கும் நோயாளிகட்குத் தாதியின் வேலையையும் தாமே மேற்கொண்டு செய்வார். சங்கீத சாதனைசெய்து பஜனை பண்ணும் வழக்கமும் அவரிடம் உண்டு. தம் சூழலில் வாழ்பவர்க்கெல்லாம் தாமே ஒரு இலக்ஷியவடிவாகத் திகழ்ந்தார்.

கங்கையையே தமக்குத் தாயென்றும் இமயமே தமக்குத் தந்தையென்றும் கங்காதேவியே தமக்கு உடநிடத்துண்மைகளைப் போதித்தாளென்றும் குருதேவர் கூறுகின்றார்.

இயற்கையின் அற்புதங்கள் இறைவனிடத்தில் ஈடுபாடு கொள்ளுமளவுக்கு அவர்தம் உள்ளப் பண்பை உயர்வுபடுத்தின. உபநிடத உண்மைகளைக் கற்றுணர்வதில் அவர் மட்டற்ற மகிழ்ச்சியுற்றார்.

கீதை பாகவதம் யோகவாசிட்டம், அவதூதகீதை, சங்கராச்சாரியார் நூல்கள் ஆதியவற்றிலும் அவ்வாறே.

பலனற்றோர், உதவியற்றோர் துன்புற்றோர், துயருற்றோர், வறிஞர், வியாதியாளர், தாழ்ந்தோர் என்போருக்குச் சேவை புரிவதில் அவர்ஈடிணையற்றபெரு மகிழ்ச்சியுறுவாராயினர். சாதுக்களுக்கும் சந்நியாசிகளுக்குஞ் சேவை புரிவதிற் பரம திருப்தியுற்றார். பஜனைசெய்வதிலும் நாம சங்கீர்த்தனம் புரிவதிலும் அற்புதமான மகிழ்ச்சியை அனுபவித்தார்.

இன்றைய உலகில் ஒரு ஆத்மீக வழிகாட்டியாகவும் தெய்வீக வாழ்வை உயர்வடையச் செய்பவனாகவும் ஆண்டவனால் தெரிந்தனுப்பப்பட்டுத் தன் தவ முயற்சியினால் உயர்நிலையடைந்த ஒரு தனிப்புருஷர் அவர். சுவாமிஜீ அவர்களின் நூல்களைப் பற்றியும் அவர்கள் அமைத்த கழகங்களைப்பற்றியும் விரிவாகப் பல்வேறு நூல்களில் விளக்கியுள்ளேன். ஆதலால் அவைபற்றி ஈண்டு யாதுங் குறிப்பிடாது அமைவுறுகின்றேன்.

சேவையும் ஆத்மீகமுமே அவர்தம் லட்சியார்த்தங்கள் என்பதில் நாம் திருப்தியுறுவோமாக.

—*—

## : பொன்மொழிகள் :

ஆத்மன் இன்புருவாயது- துன்பம் என்பது உண்மையானதல்ல. பேரானந்தம் ஒன்றே உண்மைப் பொருள். அதனை மறந்து அறியாமையால் நாம் சித்தும் சடமுங்கலந்த பொருளென நம்மை நினைத்து, வீணில் கஷ்டப்படுகிறோம்.

# : பிரணவம் :

(டாக்டர், T. M. P. மகாதேவன், M. A. Pho.)

ஓம் என்னும் ஒலிக்குப் பெயர் பிரணவம் என்பது. எவ்வாறு இந்த ஒலி எழுந்தது என்று சொல்வதற்கில்லை. வேள்விகளிலே கூறப்படுகிற மந்திரங்களோடு இது உச்சரிக்கப்படுகின்றது. ஆம் என்ற பொருளும் இதற்குண்டு. ஓம் என்ற ஒலிக்குப் புனிதமாக்கும் தன்மையுண்டு என்ற நம்பிக்கை நம்மிடையே உண்டு. உபநிஷதங்களிலே ஓம் என்பது பரம்பொருளைக் குறிக்கும். அது வேதங்களையும் உலகையுங்கூடக் குறிக்கும் சொல்லாகக் கருதப்படுகிறது. ஓங்காரத்திலிருந்து எல்லாம் தோன்றுகின்றன. ஓங்காரத்தில் மறுபதியும் ஒடுங்குகின்றன.

தைத்திரீய உபநிஷதம் "ஓம் என்பது பிரமம். ஓம்என்பது இதுவெல்லாம்" என்று கூறிப் பிறகு ஓம் என்ற ஒலி வேத மந்திரங்களோடு உச்சரிக்கப் படுவதைப் பற்றியும் சொல்கிறது. "வேதங்கள் எல்லாம் எந்தப் மதத்தைக் குறித்து முறையிடுகின்றனவோ, தவங்கள் எல்லாம் எதைச்சொல்லுகின்றனவோ மனிதர் எல்லோரும் எதை விரும்பிப் பிரமசரியவழியில்நடக்கின்றனரோ, அதைஉனக்குச் சுருக்கமாகக் கூறுவேன், இது தான் ஓம்." என்று கடோபநிஷதம் கூறிகிறது. "ஓம்என்பது இதுவெல்லாம். அதனுடைய விளக்கம் இது. எவையெவை இதுவரையில் இருந்தனவோ, எவையெவை இப்பொழுது இருக்கின்றனவோ, எவையெவை இனி இருக்கப்போகின்றனவோ அவையெல்லாம் ஓங்காரமே. மற்றும் எது முக்காலத்திற்கப்பால் இருக்கின்றதோ அதுவும் ஓங்காரமே." என்று மாண்டூக்கிய உபநிஷதம் சொல்லுகிறது.

கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார். ஆயினும் நாம் அவரைக் குறிப்பாக கோயில்களிலுள்ள உருவச்சிலைகளிற் காண்கிறோம். அவ்வாறே வேதங்களிலுள்ள பல சொற்கள் பரம்பொருளைக் குறித்த போதிலும் அவற்றுள் ஓம் என்பது முக்கியமானது. கடவுளின் மூன்று செயல்களாகிய ஆக்கல், காத்தல், அழித்தல் என்பவற்றை ஓங்காரத்தின் அ, உ, ம, என்னும் மூன்று ஒலிகள் குறிக்கின்றன. இம்மூன்று ஒலிகள் ஓங்கார மாத்திரைகள். இவற்றை மும்மூன்றாகத் தோன்றும் அநேக பொருள்களுக்கு அடையாளங்களாகக் கருதலாம். காற்று, தீ, சூரியன், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்; பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்; இவ்வாறு பல முப்பொருள்களை அ, உ, ம, என்ற ஒலிகள் குறிக்கின்றனவென்று மைத்திராயணி என்ற உபநிஷதத்தில் காணப்படுகின்றது. சில உபநிஷத வாக்கியங்களில் அ, உ, ம, என்ற

மாத்திரைகளுக்கப்பால் ஒரு மாத்திரையுண்டு என்று சொல்லப்படுகிறது. இதற்குப் பாதி மாத்திரையென்றும் அமாத்திரையென்றும் பெயர்கள் உண்டு.

பரம்பொருளையடைய விதிக்கப்படும் உபாசனைகளுள் பிரணவ உபாசனை மிகவும் முக்கியமானது. "பிரணவம் வில். ஆத்மா அம்பு; அதன் குறி பிரம்மம். குறிதவருத ஒருவனுல் அது அடையப்பட வேண்டும்; அம்புபோல அதனுடன் ஒன்ருக வேண்டும்" என்று முண்டக உபநிஷதம் கூறுகின்றது. சுவேதா சுவதர உபநிஷதம் உடலைக் கீழ் அரணிக்கட்டைக்கும், பிரணவத்தை மேல் அரணிக்கட்டைக்கும் ஒப்பிட்டு 'இரண்டையும் தியானம் என்ற முறையினுல் கடைவதால், மறைந்து நிற்கும் கடவுளைக் காணலாம்' என்று கூறுகின்றது. பிராணுயமத்தோடு பிரணவத்தைப் பிணைத்திருக்கிருர்கள் உபநிஷதங்களின் உண்மையைக் கண்ட பெரியோர்கள். பிராணனையடக்குவதற்கும், அதன் மூலமாக மனதைப் பிரசாந்தநிலைக்குக் கொண்டுவருவதற்கும் பிரணவத் தியானமும் பிரணவ உச்சாரணமும் உபயோகப்படுகின்றன. சைப்யசத்யகாமன் என்பவர் பிப்பலாத முனிவரிடம் 'மரண பரியந்தம் ஓங்காரத்தியானத்தில் ஈடுபட்டவர்கள் எந்த உலகத்தை யடைவார்கள்?' என்று கேட்டார். அதற்கு மறுமொழியளிக்கையில் 'ஓங்காரத்தின் முதல்மாத்திரையாகிய அகாரத்தைத் தியானிப்பவா இறந்தபிறகு மறுபடியும் இவ்வுலகத்தையே அடைவர். முதலிரண்டு மாத்திரைகளாகிய அகார உகாரங்களைத் தியானிப்பவர்சந்திரலோகத்திற்குச்செல்வா, அகாரம் உகாரம் மகாரம் என்ற மூன்றையும் தியானிப்பவர் சூரியமண்டலத்திற்குச் சென்று பிறகு பிரமலோகத்தையடைவார்' என்று அம்முனிவர்சொன்னுர்.

மாண்டூக்கிய உபநிஷத்தில் பிரணவத்தியானத்தின் முறை ஒன்று காணப்படுகிறது. ஆத்மாவின் நிலைகள் விழிப்பு, கனவு, உறக்கம், துரியம் என நான்கென்று அந்நூல் கூறுகிறது. ஆத்மாவிற்கு விழிப்புநிலையில் விசுவன் என்றும், கனவுநிலையில் தைஜசன் என்றும் உறக்கநிலையில் பிராஞ்ஞன் என்றும் பெயர். இவை மூன்றிற்கும் ஆதாரமாகவும்; இவற்றைக்கடந்தும் உள்ள நிலையே துரியம் என்பது. இந்நான்கும் ஆத்மாவின் நான்கு பாதங்கள் எனப்படும். அவற்றிற்குக் குறிகள் ஓங்காரத்தின் மாத்திரைகளாகிய அ, உ, ம, அமாத்திரை என்ற நான்கும் ஆகும்: பாதங்களையும் மாத்திரைகளையும் தியானத்தால் ஒன்றுபடுத்தும் முறையைக் கௌடபாதர் 'மாத்ரா ஸம்ப்ரதி பத்தி' என்று அழைக்கிருர். அகாரத்தை உகாரத்திலும் உகாரத்தை மகாரத்திலும், பிறகு இவையெல்லாவற்றையும் அமாத்திரையிலும் மறையச்செய்யவேண்டும். அதுபோலவே, விசுவனை தைஜசனிலும், தைஜசனை பிராஞ்ஞனிலும், பிறகு இம் மூன்றையும் துரீயத்திலும் ஒடுங்கச்செய்ய வேண்டும். துரீயத்தையடைந்தால் பிறப்பிறப்பு ஒளியும் என்று இவ்வாறு கௌடபாதர் இந்தயோகத்தைப் புகழ்ந்திருக்கிருர். ஓங்காரவழி வேதாந்தம் தந்திரம் முதலிய சாஸ்திரங்களில் பிரசித்தமானது.

# ஸ்ரீலஸ்ரீ மகாதேவ சுவாமிகளும், ஈழத்துக்குருபீடமும்.

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென்து குறித்தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய்நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே"

குருவணக்கம் செய்தல், குருபாரம் பரிய வாழ்க்கை முறை என்பன இக்காலத்தில் காண்பதரிது. குரு சிஷ்யமுறையில் கல்விபயில்வதும் முற்ருய் அருகிவந்துவிட்டது. குருவின்பெருமையைப் போற்றி குருவே சிவமெனக்கொண்டு தமது வாழ்வைப் புனிதப்படுத்தும்குருகுலவாழ்க்கைமுறை என்றுகைவிடப்பட்டதோ அன்றுதொட்டு உலகில் நாஸ்திகம் பரவி பல்வேறு கொள்கைகளும், வாழ்க்கை முறைகளும் பல்கிப்பெருகி இன்றுஉலகம் ஓர்பெருங் குழப்பநிலைக்குள்ளாகி இருப்பதைக் காணக்கூடியதா யிருக்கிறது. இந்நிலையையுணர்ந்த பேரறிஞர்கள் உலகின் பல பாகங்களிலும் இதற்குப்பரிகாரம் தேடும் முயற்சியில் ஆத்மீகத்துறையில் கண்ணேட்டம் செலுத்தி வருகிருர்கள்.

'இந்த உலகின் வளர்ச்சிக்கு ஒருபுதியஒழுங்குமுறை எப்பொழுதெல்லாம் வேண்டுமோ அப்பொழுதெல்லாம் வல்லமை வாய்ந்த பேரலையொன்று எழுகின்றது' என்று விவேகானந்த அடிகள் கூறியதையும் 'அறந்தேய்ந்து மறம் வளரும் காலையில் நான் அவ்வப்போது மனித வர்க்கத்தின் நன்மையின்பொருட்டு அவதரிக்கிறேன்' எனப் பகவான் கீதையில் அருளியிருப்பதையும் நோக்குங்கால் பண்டுதொட்டு காலத்திற்குக்காலம் இறையருட்தன்மை வாய்ந்த ஞான வள்ளல்கள் தோன்றி மனித வர்க்கத்தை உய்யும்நெறியில் உய்த்துவருவதை உணரமுடியும்.

உலகில் பல பேரறிஞர்கள் தோன்றி அரியசாதனைகளைப் புரிந்திருக்கிருர்கள். அவர்களுள் ஆத்மீகப் பெரியார்களாலேயே மக்களின் உள்ளத்தை மாற்றும் (உலகத்தைத் திருத்தியமைக்கும்) காரியம் நிறைவேறி வந்திருப்பதை சாத்திரங்கள் வாயிலாக

நாமறியலாம். இத்தகைய ஓர் பெரு நிகழ்ச்சி குரு பாரம்பரிய வாயிலாகவே நடைபெற்று வருகிறது. இந்தியாவில் சங்கராச்சாரிய சுவாமிகளின்குருபீடம் முதலாய பல குரு பீடங்களால் பரப்பப்பட்ட ஆத்மீகப் பேரலை அகில உலகத்தையும் நன்னெறியில் பாதுகாத்து வந்திருக்கிறது. இலங்கையிலும், யாழ்ப்பாணம் கந்தர்மடம் என்ற இடத்தில் சிவகுருநாதபீடம் என ஓர் ஆச்சிரமமும் அதில் ஓர் குருபரம்பரையும் தொடர்ந்து இருந்து வருகிறது. இக்குருபீடத்தை வேதாந்த மடம்என்றும் வழங்குவர். இதில் இன்றும் வேதாந்த அத்தியயனம் தொடர்ந்து நடைபெறுகிறது. இது யாழ்ப்பாண மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். இக் குருபீடத்தை அமைத்த பெருமை ஸ்ரீல ஸ்ரீ மகாதேவ சுவாமிகளையே சாரும்.

குரு என்றால் (கு - இருள், ரு - நீக்குபவர்) அஞ்ஞானத்தை நீக்குபவர் என்பது பொருள். எதை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகுமோ அதையறிந்த (பிரமத்தை) ஞானச்செல்வர்களே உலகை வழிநடாத்தவல்லவர். இதுகாறும் அவர்களே வழிநடாத்தியும் வந்திருக்கிறார்கள். இதை "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" என்று தொல்காப்பியனாரும்,

சுவையொளியூறோசை நாற்ற மென்றைந்தின்
வகைதெரிவான்கட்டே யுலகு

என்று வள்ளுவர் பெருமானும் எடுத்தியம்பியதை நோக்குறுங்கால் புலனாகும். இத்தகைய ஓர் ஞான குருவாலன்றிப் பரப்பிரமதத்துவத்தை எவரும் அறியவொண்ணாது. சனகர் முதலாய முனிவர்களுக்கும் இறைவன் தட்சிணாமூர்த்தமாய் இருந்து இருந்தபடி இருந்த பூரணத்துவத்தைக் காட்டியருளியமையையும் நாம் நினைவுகூரவேண்டியதாகும். இதிலிருந்து உலகில் தோன்றிய உத்தம குருமார் அனைவரும் தெட்சிணாமூர்த்தியின் அம்சமுடையவர்கள். குருபரம்



பரை இறைவனிலிருந்து தொடர்பறாவகையில்தொடர்ந்து வருவதை அருள்நோக்குடையார் உணரமுடியும்.

குருமாரை வேதசாஸ்திரங்களில் எண்வகையினராகக் கூறப்படுகிறது. அவை 1. போதககுரு, 2. வேதகுரு, 3. நிஷித்தகுரு, 4. காமியகுரு, 5. சூசககுரு, 6. வாசககுரு, 7. காரககுரு, 8. விகிதகுரு. இவர்களில் நிஷித்தகுருவும், காமியகுருவும் மக்களை துக்கசம்பந்தமுடைய விருத்தி மார்க்கத்தைக் காட்டாநிற்பர். ஏனைய அறுவகைக் குருமாரும் பின்வரும் நிலைகளில் விளங்காநிற்பர்.

போதககுரு:- மாணவர்க்குச் சுருதி, மனுநீதியை உரைப்பர்.

வேதகுரு:- தத்துவார்த்தங்களை மாணவருக்குத் திரம் செய்வர்.

சூசககுரு:- மாணவர்க்கு நித்திய விவேகமளித்து நாசத்தைவருவிக்கும் அகக்கரணம், புறக்கரணம் அடக்கல் வாயிலாக உலக விவகாரங்களில் சிறிது சிறிதாக விடுவித்து பொறுமையை உண்டாக்கி ஈஸ்வர விஷயத்தைக் கேட்குமாறு செய்வர்.

வாசக குரு:- மாணவர்க்கு உடல் முதல் உலகப்பொருளனைத்தும் அழிவுடையதென்று ஆத்மாவில் விருப்புண்டாக்குவர்.

காரககுரு:- சீவனும் சிவனும் ஒன்று என்னும் ஐக்கிய ஞானத்தை உண்டாக்குவர்.

விகிதகுரு:- மாணவனை நித்திய மோட்ச நிலையிலே வைப்பர்.

மேற்காட்டிய அறுவகை அம்சங்களில் ஓர் சில அமைந்திருக்கும் குரவர்களைக்காண்பதரிது. எல்லா அம்சங்களும் பொருந்திய குரவர்கள் உலகில் சிரேட்டமானவர்கள். ஸ்ரீல ஸ்ரீ மகாதேவ சுவாமிகள் அறு

வகைக்குருத்துவாம்சமும்அமைந்தவர் என்று அன்னா ருடன் உடனிருந்துகற்றோரும் அவர்காலத்துஅறிஞர் களும் கூறியிருக்கிறார்கள். எனினும் சுவாமிகள் தம்மை வெளிக்காட்டாது ஆடம்பரமின்றி மிக மிக அடக்கமாக இருந்து தாம் இப்புவிக்கண் வந்த நோக் கத்தை நிறைவேற்றிப் பூதவுடல் நீத்துப்பூரண மெய் தினார்.

இத்தகைய உத்தமகுருவாகிய ஞானவள்ளல் குரு பீடத்தின் நான்காவது வாரிசு ஆவார். காசிகானந்த சுவாமிகள் இந்தியாவில் உள்ள ஓர் உத்தமப்பெரி யார். இவரின்மாணாக்கர் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த சாசன் சுவாமி என்றழைக்கப்படும் சின்னத்தம்பி சுவாமிகள் ஆவர். சாசன் சுவாமிகளின் மாணாக்கர் பெரியசுவாமி என்று அழைக்கப்படும் கனகரத்தி னம்சுவாமிகளாவர் நாம்இங்குகூறப்புகும் மகாதேவ சுவாமிகள் ஸ்ரீ கனகரத்தினம் சுவாமிகளின் உத்தம மாணாக்கராவர். கங்கைப்பிரவாகம்போன்று இந்தி யாவிலிருந்து ஈழம்வரை ஓர் குருபாரம்பரியம் வளர் ந்து மக்களை உய்விக்கும் உயர்நெறிகாட்டி நிற்கும்விந் தையை நோக்கி நோக்கி இறைவன் திருவருளை வியந்து இன்புறற்பாலது.

மகாதேவ சுவாமிகள் ஊர்காவற் றுறையைச் சேர்ந்த கரம்பனில் திரு. நா. இராமநாதர் அவர்க ளுக்கும் அவரது உத்தம பத்தினி அன்னபூரணி அம் மையார் அவர்களுக்கும் யுவஹு ஆவணிமீ 12-ந்வ திருவாதிரைநாளன்றுமெய்ஞ்ஞானச்சுடர்கொழுத்த மேதினியில் திருவவதாரம் செய்தார். இவர் தம்பிள் ளைத்திருநாமம் தம்பையா. பாலியவயதுதொடக்கம் மூதுரை, நன்னெறி, முதலாம் கருவி நூல்களில் தேர்ச் சிபெற்றுவிளங்கினார். நாளடைவில் பெரியபுராணம் கந்தபுராணம் முதலிய புராணங்களை நன்கு நற்றுத் தெளிந்து ஆலயங்களில் கேட்போர் உளங்கனிய புரா ணங்களுக்கு உரை கூறிவரலானார். இவர் ஓர்பிரம வித்து ஆவார் என்பதும், பலரையும் உய்ய வைக்கும் பரமாசாரியராவார் என்பதும் அன்னாரின் இளமை

அடுத்த இதழில் முடியும்.


- சர்க்கரை கொல்லி சூரணம் -

(DIABETES) என்னும்

நீரிழிவு மதுமேகத்திற்கு மிகச்சிறந்த சூரணம்.

யாவும் மூலிகையினால் சித்தர்களின் அனுபவ முறைப்படி தயாரிக்கப்பட்டது.

சர்க்கரை வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு அற்புத ஔடதம்.

தபாற்சிலவுட்பட டின் ரூபா 6-75.

☞ SAMBU INDUSTRIES – SALEM (S.I.)

இலங்கையில் கிடைக்குமிடம்:

ஆத்மஜோதி நிலயம்

நாவலப்பிட்டி - சிலோன்.

- வாய்வு சூரணம் -

உஷ்ணவாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு. மலக்கட்டு மலபந்தம், அஜீரணம், கைகால் அசதி, பிடிப்பு பசியின்மை, வயிற் றுவலி, பித்தசூலை, பித்தமயக்கம், புளியேப்பம், நெஞ்சுக்கரிப்பு, முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரணசக்திக்கும் தேகாரோக்கியத் திற்கும் மிகச்சிறந்த சூரணம்.

உபயோகிக்கும்முறை:– இந்தச்சூரணத்தில் $\frac{1}{2}$ தோலா அளவு எடுத்து அத்துடன் $\frac{1}{2}$ தோலா சீனி அல்லது சர்க்கரை கலந்து ஆகா ரத்துக்குமுன் உட்கொண்டு கொஞ்சம் வெந்நீரும் அருந்தவும். காலை மாலை தொடர்ந்து உட்கொள்ளவேண்டும். தேகத்தை அனுசரித்து உட்கொண்டு வரும்போது அளவைக் கூட்டியும் குறைத்தும் உட்கொள்ளலாம். நெய், பால், வெண்ணெய்நிறை யச் சாப்பிடலாம். வாரம் ஒருமுறை எண்ணெய் ஸ்நானம் செய் யலாம். மூலிகையினால் தயாரிக்கப் பெற்றது. (பத்தியமில்லை)

தபாற்செலவு உட்பட டின் 3 ரூபா 75 சதம்.

சம்பு இண்டஸ்ரீஸ், சேலம். (எஸ். ஐ.)

மலாயாவிற்கு ஏஜண்டுகள் தேவை.

இலங்கையில் கிடைக்குமிடம்:–

ஆத்மஜோதி நிலயம்

நாவலப்பிட்டி - (இலங்கை)

*Registered at the G. P. O. as a News Paper, M. L. 59/300*

## சந்தாநேயர்களுக்கு

இம்மாதத்தோடு ஜோதிக்குப் பத்தாண்டு நிறைவுபெறுகின்றது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். பல ஆத்மானுபூதிச் செல்வர்கள் ஜோதியின் வளர்ச்சிக்குக் கண்ணும் கருத்துமாக உழைத்துள்ளார்கள். அவர்கள் எல்லாருக்கும் எமது இதயங்கனிந்த வணக்கத்தைச் செலுத்துகின்றோம். சந்தாநேயர்கள் தத்தமது சந்தாப்பணத்தைச் சிரமம்பாராது உரியகாலத்தில் அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இந்தியாவிலுள்ள சந்தா நேயர்கள் இந்தியாவிலிருந்து நேராக இவ்விடம் பணம் அனுப்புவதில் சில தடைகள் இருப்பதால் அவர்கள் தமது சந்தாவைப் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பிவைப்பதோடு இவ்விடமும் அறியத்தர வேண்டுகின்றோம்.

***இந்தியாநேயர்கள் பணம் அனுப்பவேண்டிய விலாசம்***

R. VEERASAMBU, SAMBU INDUSTRIES, SALEM 2.

மலாயா, தென்னபிரிக்கா, பர்மாவிலுள்ள நேயர்கள் தமது சந்தாவை வழக்கம்போல் பிரிட்டிஸ் போஸ்ரல் ஓடர் மூலமே அனுப்பிவைக்கலாம்.

**ஆத்மஜோதிநிலையம்**, நாவலப்பிட்டி [சிலோன்]


## கலைச் செல்வி

**கலைகள் பலவளர்க்கும் கன்னித்தமிழ்ச் செல்வி**

*சிறு கதைகள், கட்டுரைகள், கவிதைகள்.*

*விமர்சனப்போட்டி. மாணவர்போட்டி*

*வளரும் எழுத்தாளர் பகுதி இன்னும் பல.*

சந்தாதாரர்கள் விற்பனையாளர்கள் உடனே எழுதுக

**கலைச்செல்வி: கந்தரோடை, சுன்னுகம்.**


Printed by N. Muthiah at the Sri Murugan Printers - Punduloya
and Published by N. Muthiah, Athmajothi Niliyam, Nawalapitiya
Hony. Editor K. Ramachandra, Athmajothi Niliyam, Nawalapitiya